REGD No. M. 4642

திராவிடநாடு

இலங்கை 15 சதம் | விலை அணா 2

மலர் 9 | 4—3—51 | இதழ் 37

சக்கரதாரிகள் 2

குரங்கு கை, பூமாலை!

[அரங்கண்ணல்]

சீச்சீ! இந்தப் பழம் புளிக்கும் என்று கூறிவிட்டு, பிறகு அந்த பழத்தைப் பறித்துத் தின்போனைக் கண்டால் எவரும் எள்ளி நகையாடவே செய்வர்! வீண்ஜப்பத்தோடு வீணாவாணியையல்லவோ நான் விரும்புகிறேன் இந்த வேசி எனக்குக் கால்தூசுபோல, என்று சொல்லித் திரிந்தவன், சோற்றுக் கலையும் சந்து பொந்துச் சுந்தரியென்று தூற்றியவளையே சரசலீலாவதியாகக்கொண்டால், கேலியுங் கிண்டலும் எழும்பாமற்போகாது 'திருடன்! கபடன்! திறமையில்லாதவன்!' என்று வீட்டு வேலையாளை இகழ்ந்து தூற்றிய மாடி வீட்டு 'மைனர்', சொத்துக்கு அதிபதியானதும், தூற்றிய ஆளையே சொந்த வேலைகளைக் கவனிக்க நியமித்தால், சிரிக்கத்தான் செய்வர் எவரும்!

"மோசமான ஆசாமிகள்!"

"ஒரே அதிகாரத் திமிர் — இதை அடக்குவதுதான், நாங்கள் ஆட்சி பெற்றதும் செய்யப்போகிற முதல் காரியம்"

"வெள்ளையனின் காலடி தாங்கிகள்! கொஞ்சங்கூட, தேசாபிமானம் இல்லாததுகள்!!"

"வெள்ளையன் வீசிய எலும்புத் துண்டுக்காக, நமது நாட்டைக் காட்டிக்கொடுப்பவர்கள் கங்காணிகள்! கையாலாகாததுகள்!"

"சுயராஜ்யம் வந்ததும் நாங்கள் செய்யப்போகும் முதல் காரியம், வெள்ளையன் ஏற்படுத்திவிட்டுப்போன நிர்வாக முறையை மாற்றி அமைப்பதுதான்!"

இப்படியெல்லாம், ஆங்கிலேய ஆட்சியின்போது, வெறுத்தனர்— தூற்றினர். பாதந்தாங்கிகள்! பதவி வேட்டைக்காரர்கள்! நாட்டைக்காட்டிக்கொடுப்பவர்கள்! என்றெலாம் எள்ளி நகையாடினர். பேச்சோடு மட்டுமல்ல, சிலபல வேளைகளில், தடியும் கல்லுங்கூட வேலை செய்யப் புறப்பட்டதுண்டு, ஆத்திர மூட்டும் வகையில்!

அத்தகைய வெறுப்பும் வீம்பும் கொண்டு பேசிவிட்டு, இப்போது அதே நிர்வாகச்சக்கிரத்தால் காலந்தள்ளும் — ஆமாம்! காலத்தைத் தான் தள்ளுகின்றனர், ஆட்சியையல்ல நடத்திச் செல்வது — காங்கிரஸ் கனம்களோ, இந்த எள்ளல், கேலி, சிரிப்பு ஆகியவைகளிலிருந்து தப்பிவிட்டதாக நினைத்துக்கொண்டு சதிராடுகின்றனர்! சதிர்—அதுவும், பின்னணி இல்லாதது; தாளம் கெட்டது; ஒரே தாறுமாறான ஆர்ப்பாட்டம்!

இந்த கோர ஆட்டத்தால், நாட்டில் விளையும் விபரீதங்களும், மக்கள் வாழ்விலேற்படும் விபத்துக்களும் கொஞ்சமல்ல, குரங்கு கையில் பூமாலை, என்று கூறுவார்களே, அதையும் மீறிவிட்டது, அதிகாரிகளை ஆட்டுவிக்கும் பொறுப்பு கொண்டோரின் போக்கு!

வெள்ளையனின் ஆட்சி நிர்வாகத்தைக் கண்டித்தோர், இன்று, அதே நிர்வாக சக்கரத்தால்தான் காலந்தள்ள முடிகிறது. இன்னும் கூறினால், வெள்ளையர் விட்டுச் சென்ற நிர்வாகச்சக்கரம், இவர்களை இழுத்துக்கொண்டு போகிறதே ஒழிய, இவர்களால் நிர்வாகச் சக்கரம் சுற்றிவிடப்படவில்லை. சுற்றி விடும் திறமையும் அனுபவமும் இல்லாதவர்களாகயிருக்கிறார்கள், காங்கிரஸ் கனம்கள்!

குறை கூறினர், சுலபமாக.

ஆனால், கூறும்போது, எதைக் கூறுகிறோம், எதற்காக, என்றெல்லாம் எண்ணவில்லை.

இதற்கு, நாடு விடுதலைபெறவேண்டும் என்ற ஆவேசமும் ஆசையும்

தான் காரணம் என்று கூறலாயினர் அவர்கள்!

வெள்ளையன் மீது வசைமாரி பொழியவேண்டும் என்ற ஆவேசம், ஆசை காரணமாக, ஆங்கிலேயன் நிர்வாகத்தை, சீச்சி! இந்தப் பழம் புளிக்கும் என்றனர், விலை மங்கையோடு ஒப்பிட்டனர், நாங்கள் ஆட்சிக்கு வந்தால் இந்த நிர்வாக முறையை மாற்றிவிட்டுத்தான் மறுவேலை பார்ப்போம் என்று, கூவினர்.

ஆனால், பொறுப்பேற்று மூன்று ஆண்டுகள் ஆகியும், பழைய நிர்வாகம்தான், நீடிக்கிறது. முன்பிருந்த ஆட்சிச் சக்கரம்தான் சுற்றுகிறது.

X X X

ஒரு ஆட்சி மாறிவிட்டு, புது ஆட்சி மலர்கிறது என்றால், முன்பிருந்த ஆட்சி அமைப்புமாறும், புது அமைப்பு ஏற்படும் என்றே பொருளாகும்.

அதிலும், இந்தியாவை பொறுத்த மட்டில ஆட்சி அதிகாரம். ஒரு அந்நிய ஆதிபத்தியத்திடமிருந்து கைப்பற்றப்பட்டதாகும்.

அந்நிய ஆட்சி மறைந்து, நம்ம சர்க்கார், ஏற்படுகிறது என்றால், அந்நியன் ஆட்சியில் நடைபெற்ற அலங்கோலங்கள் நீடிக்காது; அவை மறையும், புது நிலை மலரும் என்றே மக்கள் எதிர்பார்ப்பர்.

அதிலும், மக்களிடையில், அந்த வகையில் எதிர்பார்க்கும் ஆசையைப் பெரிதும் வளர்த்தே வந்தனர், காங்கிரஸ் தலைவர்கள்.

ஐ. சி. எஸ். அதிகாரிகள் என்றால் ஆத்திரம்! போலீஸ் என்றால் எரிச்சல்! அதிகாரிகள் என்றால் ஆவேசம்! — இந்த, பாதையில நடந்து காட்டி, அதன் மூலம், அவர்கள்தான் அந்நிய ஆட்சி அலங்கோலமாக நடப்பதற்கான, காரணம் என்ற பனநிலை, மக்களுக்கு ஏற்படுமாறு செய்தனர்.

ஆகவே, சுயராஜ்யம் வந்ததும் அத்தகைய அலங்கோலங்கள் நீடிக்க மாட்டா—அதற்கான வழிவகைகள் மாற்றப்பட்டு, நல்லாட்சி மலரும், புதுவாழ்வு பெறுவோம் என்று மக்கள் நம்பினர்.

மக்களின் நம்பிக்கை, இந்த மூன்று ஆண்டு 'நம சர்க்கார்' ஆட்சியில் நாசமாகிவிட்டது.

அந்நியன் சென்றுவிட்டான்—ஆனால் அலங்கோலங்கள் முடிவு பெறவில்லை; மாறாக வளர்ந்து கொண்டே உள்ளன.

அலங்கோலங்கள், அப்போது ஏற்பட்டபோதெல்லாம் இதற்குக் காரணம் அதிகாரிகள், அவர்களை ஆட்டிப்படைக்கும் அந்நிய ஆட்சி என்று கூறப்பட்டது.

"நாடு காடாகிறதே, ஏன்?"

"நடப்பது வெளிநாட்டான் ஆட்சியல்லவோ! அதனால்தான்"

"வரிப்பளு தாங்க முடியவில்லையே!"

"வரட்டும் நம்ம ராஜ்யம்! இப்போது அந்நியனல்லவோ ஆள்கிறான். ஆகவே, வரி வரியாக வாங்கி, தன் பாதந் தாங்கிகளைக் கொழுக்க வைக்கிறான்"

இதுபோல, அலங்கோலங்களுக்கு, அந்நிய ஆட்சியும் அவர்களின் அதிகாரிகளுந்தான், என்று காரணம் காட்ட முடிந்தது.

ஆனால், இப்போதோ, நடப்பது சுயராஜ்யம், நம்மைச் சேர்ந்தோரே நம்மை ஆள்கின்றனர்.

இருந்தும், அலங்கோலம் ஒய்வில்லை — வளருகிறது. இதற்குக் காரணம் யார்?

"காரணம் யாரா? நாங்களல்ல — அதிகாரிகள்தான்!" என்று, முன்பு போல, இப்போது அதிகாரிகளைக் காரணமாகக் காட்டிட முடியாது.

> "அதிகாரிகள் மிகவும் பொறுப்போடு நடந்துகொள்கின்றனர். அவர்களது சேவா உணர்ச்சியையும், சிரத்தையையும் காணும்போது நாம் பாராட்ட வேண்டியவர்களாக இருக்கிறோம். எதற்கெடுத்தாலும் அவர்களைக் குறை சொல்வது மிகவும் கெட்ட பழக்கம்"

இதுபோல, இந்திய ஜனாதிபதியிலிருந்து, ஒவ்வொரு காங்கிரஸ் மந்திரியும் இப்போது ஆங்காங்கு பேசுகின்றனர்.

இந்த உணர்வு, இப்போதுதான் இவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது! இவர்கள் கூறுவதுபோல, எதற்கெடுத்தாலும், அதிகாரிகளைக் குறை கூறுவதை, நாம் எப்போதும் அங்கீகரிப்பவர்களல்ல.

ஏனெனில், அதிகாரிகள் என்போர், ஒரு ஆட்சியின் அம்புகள்!

ஒரு சர்க்கார் மாறி, இன்னொரு கட்சியினரின் சர்க்கார் அமைந்தாலும், அவர்கள் மாறமாட்டார்கள்.

வில், மாறலாம்; ஆனால் அம்புகள் மாறமாட்டா.

வேண்டுமானால், அம்புகளின் வேகத்தையும் அவைகள் செல்லும் திசையையும் கட்டுப்படுத்தியும், தடுத்து நிறுத்தியும் பாயச்செய்யும் சக்தியை மாற்றவும் அமைக்கவுமான சக்தி விற்களுக்கு உண்டு.

இந்த உண்மை, நமக்கு நன்றாகத் தெரியும். ஆனால், முன்பு, அதிகாரிகளை 'தேவதை'கள் என்றும், 'வால் பிடிப்போர்' என்றும் வர்ணித்த காங்கிரஸ் தியாகிகள், இப்போது, 'அதிகாரிகளைக் குற்றஞ் சொல்லாதீர்கள்' என்ற, புதுப் போதனையிலே இறங்கியிருக்கிறார்கள்.

முன்பு, திட்டினர்!

இப்போது பாராட்டுகின்றனர்!!

இவ்வளவு நாட்களுக்குப் பிறகு, இந்த உண்மையை, நாட்டுக்குச் சொல்கின்றனர் — அதுவும் நாடாளும் பொறுப்பிலிருந்தவாறு

ஆகவே, அலங்கோலங்களுக்குக் காரணம அதிகாரிகள் இல்லை— திட்டவட்டமாகத் தெரிகிறது. நாட்டுக்கும், நாட்டை ஆளும் சர்க்காருக்கும்

பிறகு, யார்தான் காரணம்? கூறு

அரூரில் 6-3-51 செவ்வாய் இரவு 10 மணிக்கு

சி. என். அண்ணாதுரை எம். ஏ. அவர்கள் தலைமையில்

ஊராண்மைக் கழகத் தந்தை மணியம் M. R. இரா. மாணிக்கம் அவர்கள் முன்னிலையில்

மணியதிகாரம்

(ஆசிரியர் மு. அ. ஆடலழகன்)

எனும் நாடகம் நடைபெறும்.

நாடக அமைப்பாளர்

M H பரசுராமன்

குறிப்பு:-

நாடக வசூல், உயர்நிலைப்பள்ளி வளர்ச்சிக்கும், டவுன் கிளைப் நூல் நிலையத்திற்கும் நிதியாக அளிக்கப்படும். (A)

கிறார், ஜான் மத்தாய் — முன்னாள் இந்திய அமைச்சர்.

"உலகில் பல நாடுகள் மிகவும் கஷ்ட நஷ்டப்பட்டே சுதந்திரம் பெற்றன; ஆனால் நாமோ இங்கு எளிதாகச் சுதந்திரம் பெற்றோம்"

"சுதந்திரம் பெறுமுன் எதிர்காலத்தைச் சித்தரித்தக் காட்டுவதிலேயே இருந்தோம். அதே முறை இன்னும் நீடிக்கிறதே யொழிய, நாட்டின் நிலையையும் நலிவையும் தீர்க்க யோசிப்பதுமில்லை முயல்வதுமில்லை."

"அதிகார மாற்றம் ஏற்பட்டுவிட்டது என்ற எண்ணத்தில் மென்மேலும் அதிகாரங்களை அதிகரித்துக் கொள்ளவேண்டும், ஆட்டிப்படைக்க வேண்டும் என்ற ஆசையிருக்கிறதே ஒழிய, எதைச் செய்தால் நாடு நலம் பெறும் என்ற எண்ணமுமில்லை; ஆர்வமுமில்லை."

X X X

ஜான்மத்தாய், இந்திய நிர்வாகத்தை நடத்தியவர் — இது போலக்கூறுகிறார்

ஆட்சிபீடா் ஏறியோரிடையே ஏற்பட்டிருக்கும், புது சூழ்நிலையே இவ்வளவு அலங்கோலத்துக்கும் காரணம் என்பதாக.

இந்தக் குற்றச் சாட்டுகளையே நாம் சொன்னோம். கசந்தனர், காங்கிரஸ் நண்பர்கள்!

நாளுக்கொரு அதிகார மாற்றம்!

நாழிகைக்கோர் உத்தரவு!

திறமை பாழ்' நேரம் வீண்! என்று, காங்கிரஸ் ஆளவந்தார்பற்றி, பலமுறை, பல இடங்களிலிருந்து கேலியும் கிண்டலும், எழும்பாமலில்லை.

"எந்த அதிகாரச்சக்கரத்தைகூடாது என்றார்களோ, அதை வைத்துக் கொண்டே ஆள்வதா?" — இது போல சோஷியலிஸ்டுகள், கேட்டனர்.

"அதிகாரிகளைக் குறை கூறுவதை விட, அவர்களுக்குத் திட்டமும் உத்திரவும் பிறப்பிக்கும் நிலையிலிருக்கும் மந்திரிமார்களின் போக்கு திறமையாக இல்லை" — இதுபோல, நாம் சொன்னோம்.

இப்போது, இந்திய சர்க்காரின் முன்னாள் அமைச்சர் மத்தாய் வெளியிட்டுள்ளார், "பிரிட்டிஷ்காரன் விட்டுப்போன நிர்வாக இயந்திரத்தால்தான் காங்கிரஸ் ஆட்சி, ஏதோ, ஓடிக்கொண்டிருக்கிறது. சொல்லப்போனால், மந்திரிகள் என்ற கவுரவம்கூட அதிகாரிகளால்தான் காப்பாற்றப்பட்டு வருகிறது!" என்ற அர்த்தத்தில்

மத்தாயின் கூற்றை, கூர்ந்து நோக்கினால், நாள்தோறும் கேள்விப்படுகிறோமல்லவா, 'மந்திரிகள் கையெழுத்துப்போடும் நிலையில்தான் இருக்கிறார்கள். என்ன செய்வது என்றுகூட அவர்களுக்குத் தெரிவதில்லை!" என்றெல்லாம்; அது உண்மையானது என்று விளங்கும்.

* *

ஒரு கட்சி நாட்டை ஆள்கிறது என்றால், அது மக்களுக்குச் சொல்லிய உறுதிமொழிகளைத் தாங்கி, அவைகளை நிறைவேற்றவேண்டும்.

அந்த உறுதிமொழிகளைக் காரிய மாற்றும் வகையில் திட்டங்களை வகுத்துக் காட்டுவது, அந்த மந்திரி சபையின் பொறுப்பாகும்.

வகுத்துக் காட்டிய திட்டங்களை நிறைவேற்றி, அவைகள் ஒழுங்காக நடைபெறுமாறு செய்வது சருவதே, அதிகாரிகள் நிரம்பிய நிர்வாகச் சக்கரத்தின் கடமையாகும்.

தவறும் பிழையும், மந்திரிகளாயிருப்போரிடையில வளர்ந்தால், அது நாட்டையும் மக்களையும் வெகு அதிகமாகப் பாதிக்கும்.

இந்த நிலைதான், இந்திய உபகண்டத்தில் நீடிப்பது.

இன்று அலங்கோலங்களுக்கு, தெளிவற்ற இந்நிலைதான் காரணமாகும்.

இதுபற்றி. ஆதாரங்கள் காட்ட வேண்டுமானால், இன்று மந்திரிகளாயிருப்போரின் திறமைக் குறைவைப் பட்டியல் பட்டியலாகக் காட்டலாம்! எனினும், இதோ, கண்ணுக்குத்தெரிந்த சிலகாட்சிகள்.

—உணவுப் பிரச்னை—

வெளிநாடுகளிலிருந்து எவ்விதஉணவு இறக்குமதியும்செய்ய போவதில்லையென, ஆட்சிபீடா் ஏறியபோது சொல்லினர்

நமக்குத் தேவையானதை நாமே சம்பாதித்துக்கொள்ள வேண்டும். வெளிநாட்டை எதிர் பார்க்க முடியாது. பரந்த பாரதபூமி, வெளியாரை எதிர் பார்ப்பதா? — இது போல, நேரு கர்ஜித்தார்.

சுயதேவைத் திட்டம்
உற்பத்தி பெருக்குத் திட்டம்

என்றெல்லாம் 'திட்டங்கள்'பல உருவாயின.

கிடைத்த பலன்—பட்டினி! சாவு'பிணமலை!! முடிவு, வீம்பு மறைந்து இப்போது வெளி நாட்டிலிருந்து உணவுப் பொருளை இறக்குமதி செய்யலாம் என்று இந்திய சர்க்கார் வந்திருக்கிறது.

சுயதேவைப் பூர்த்தி-வாய்ச் சொல்லாயிற்று!

சேலம்—நெசவாளர் உரிமைப்போரில் ஈடுபட்டபோது 144 பாய்ந்தும், தயங்காது மீறி, உரிமைக்காகப் போராடிய தோழர்கள் பூர்ணையா, தி.மு.க. செயல் வீரர் ஏ. சித்தையன்.

திட்டமும் கர்ஜனையும் தோல்வியுற்றுவிட்டன.

—நூல் (உடை) பிரச்னை—

நூலை, ஏற்றுமதி செய்யக்கூடாது. தேவையான நூலை, தறிக்காரர்களுக்குத் தரவேண்டும்.

பருத்தியையும், நூலையும் வெளிநாடுகளுக்கு அனுப்பக்கூடாது — என்று, நம்போன்ற பலர் சொன்னோம்.

தறிக்காரர்களுக்கு வேண்டிய நூலைக்கொடுத்து, அவர்கள் செய்யும் துணிமணிகளை வெளிநாடுகளுக்கு அனுப்பவேண்டும் — என்று சொன்னோம்.

சர்க்காரோ, முதலில் கைத்தறி துணிகளை ஏற்றுமதி செய்ய தடைகளைப் போட்டது. பிறகு, கிளர்ச்சி அதிகமாகவே தடைகளைத் தளர்த்தியது.

ஆனால், அதே நேரத்தில், தறிகாரர்களுக்கு வேண்டிய நூலும் பருத்தியும், வெளியே செல்ல அனுமதித்து—ஆங்காங்கே உள்ள கைத்தறிக்காரர்களும், ஆலைகளும் — நூலும் பருத்தியும் இல்லாது தவிக்கச் செய்தது.

இப்போது,

இந்த உத்திரவுகளை மாற்றி, புது வகையில் கட்டளைகளைப் பிறப்பிக்கின்றது.

—வியாபாரம்—

காஷ்மீரப் பிரச்னை முதலானவைகளைக் காரணமாகக் காட்டி, பாகிஸ்தானுடன் வியாபாரம் செய்ய, தடைகளைப் பிறப்பித்தது.

பாகிஸ்தானில் அரிசி கிடைக்கிறது; நமது லுங்கி, சணல் முதலானவைகளை அனுப்பி, அதை வாங்கலாம். வீம்பு வேண்டாம்!—என்று பலர் கூறினர். கேட்கவில்லை!

ஆனால், இப்போது—

கடந்தவாரம் பாகிஸ்தானுடன் வியாபாரம் தொடங்குவதற்கான பேச்சு வார்த்தைகளைத் துவங்குவதில் ஈடுபட்டிருக்கிறது.

இதுபோல, ஒவ்வொரு உத்திரவையும் கூர்ந்து நோக்கினால், தவறுகள் ஏராளமாகக் காணக்கிடைக்கும்!

—கொரியப் பிரச்னை—

போர்வீடுபட அமெரிக்க தீர்மானத்துக்கு முதலில் இணக்கம். பிறகு: சமரசகீதம்!

—காஷ்மீர்த் தகராறு—

கத்தி முனையில் வெற்றி பெறுவோம் என்று கர்ச்சனை, இப்போது—பிரச்னையும் தீராமல், பொருளும் வீணாவதால் சமரசகீதம்!

X X X

காங்கிரஸ் மந்திரிமார்களிடையே திட்டமான முடிவெதவும் இல்லை என்பதை விளக்க, வேடிக்கையான நிகழ்ச்சிகள் மலைமலையாக உள்ளன! இந்த நிகழ்ச்சிகளால், வீணான பணத்தைக் கணக்கெடுத்தால, நெஞ்சம் குமுறும்!

'ரெடிமேட்' வீடுகள் கட்டும் திட்டம் என்ற பேரால், புதுத் தொழிற்சாலையொன்றை நிறுவினர். அது பலன் தரவில்லை; அதனால் ஏர்பட்ட பணம் பலகோடி. இது சுகாதார மந்திரியின் திருச்சேவை!

தாமோதரப் பள்ளத்தாக்கு அணைக்கட்டு, என்ற திட்டம் வகுத்து 50-கோடிக்குமேல் பணம் செலவாகும் என்று முன்பு அறிவித்தனர் இப்போது 110-கோடி தேவை, இன்றேல் காரியம் சாத்தியமில்லை என்று சொல்கிறார், மராமத்து மந்திரி! ஆசிய கலாச்சாரம் ஏற்படுத்த வேண்டும், அதற்கான வழிவகைகளைக் காணப் போகிறேன் என்று கர்ஜித்து, மாநாடு கூட்டி, பணத்தை விரையமாக்கினார், கல்வி மந்திரி! பலன் பூஜ்யம்!

வரும் வருமானம் 320 கோடி என்றால், 168 ராணுவத்துக்குச் செலவு என்று ஒதுக்கினர். ஆனால் காஷ்மீரில் கூட, ஆண்டு இரண்டாகியும் சிறு பலன் கிடைக்கவில்லை, பாதுகாப்பு மந்திரிக்கு!

முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்பு என்ற பிரிவுகள், இரயிலில் இருப்பதால் பேதமும் பிளவும் காட்டப்படுகிறது என்று வெளிப்படுகிறது. ஆகவே அதையெல்லாம் ஒழிக்கவேண்டும் என்று முழக்கி இரயிலவேயில், முதலில மாற்றம் கொணர்ந்தனர்.

பிறகு, சில மாதங்களில் இந்த மாற்றம் சரியில்லை முன்பிருந்ததே சரி என்று, உத்திரவு பிறப்பித்தனர்.

இந்த 'திருக்கைங்கர்யத்துக்காக' கோடிக்குமேல், பணம் நாசமாயிற்று ரயில்வே மந்திரியால்!

கண்ணீர் கசிந்துருகச் செய்யும் காட்சிகள்! ஏழை இந்தியாவின் வரியைக் கரியாக்கும் செயல்கள்!—இதுபோலப் பலப் பல.

இத்தனையும், பாட்சிமை தங்கிய நாது காங்கிரஸ் ஆட்சி தரும் வேதனைக் காட்சிகள்.

பணம்! நேரம்!! அத்தனையும் நாசமாகிக் கொண்டிருக்கிறது. நாட்டு நிலையோ, நலிந்துகொண்டே போகிறது.

சித்தூரில், கடந்த பிப் 9ந் தேதி ஒரு ரசமான சம்பவம் நடைபெற்றிருக்கிறது.

சென்னை, கவர்னர் பவநகர் அங்கே சென்றிருந்தபோது, ஒரு கிராமவாசியை அழைத்துக் கேட்டிருக்கிறார்.

கவர்னர்:— ஏனப்பா, உன் தொழில் என்ன?

பதில்:- எனக்கென்று ஒரு தொழிலும் இல்லிங்க!

க:- தொழிலில்லை யென்றால் பிறகு எப்படி ஜீவனம் நடத்துகிறாய்?

ப:- அதுவா—திருடுத்தான்!

க:- திருடியா ஜீவனம் செய்கிறாய்? ஊம்... சரி, எதைத் திருடுவாய்......

ப:- வேறு எதை நான் போய்த் திருடப்போகிறேன். கொல்லையிலே விளையும் மிளகாய், கறிகாய், முதலான பண்டங்களைத்தான்.

கேட்டவர் கவர்னர்! பதில் சொன்னது ஒரு ஏழை!—ஆனால், திருடன்!

(9-ம் பக்கம் பார்க்க)

புதுமை நூல்கள்

கள்ளமார்க்கெட் மோகினி 0-8-0

அண்ணா அவர்கள் சிறப்புரையுடன்.

காதலர் பாதையில் 0—5—0

அச்சில்

நடிப்புக் கலைச் செல்வம் 0—4—0

வேலைன்று 0—4—0

அண்ணாத்துரை, M. A. அவர்கள் எழுதியது.

வியாபாரிகளுக்கு கழிவு 25%

கலைச் செல்வி நிலையம்

33. கலியப்ப நாயக்கன் தெரு, A. சிந்தாதிரிப்பேட்டை — சென்னை 2.

8-ம் பக்கத் தொடர்ச்சி

அவர் கருத்துப்படி ஏற்பாடு செய்யப்பட்டது. டாக்டர், தன் திறமை முழுவதும் காட்டி அவரைக் குணப்படுத்த பாடுபட்டு வந்தார்.

டாக்டர் காலை, மாலை அவருக்கு மருந்து தருவார் — அவர் உடல் நிலையைக் கவனிப்பார்.

அப்பொழுது வைத்தியர் வழங்கும் பரிசுகள் என்ன தெரியுமோ, வெறும் தூற்றல்தான்

அவர் திட்டுவார் — டாக்டர் சிரிப்பார்.

அவருக்கு ஊசி போடுவார்—ஆனால் அவரோ, இவருக்கு தூற்றல் மாலை அணிவிப்பார்.

டாக்டரோ, இந்த வார்த்தைகள் எதையும் காதில் வாங்கிக் கொள்வதே இல்லை. அவருக்கு மருந்து தருவதின் மூலம், தனக்குப்பிடித்தம் போக்கும் முறைகளும் தெரிந்திட வேண்டும் என்ற முயற்சியிலே ஈடுபட்டிருந்தார்.

சிலசமயங்களில், அவரது மனைவியார் இருக்கும்பொழுதும் அவர் திட்டுவதுண்டு. அப்பொழுது அவள் அவரது வாயைப் பொத்துவாள். டாக்டர் அவரது மனைவி செய்வது தவறென்று கண்டிப்பார்.

'மனதிலுள்ள பாரத்தை வெளிப்படுத்தினால்தான் அவர் குணமடைய முடியும் — அம்மையே, நீங்கள் அதைத் தடுக்கக்கூடாது" என்று கூறுவார்.

அவள் கண்களில் நீர் ததும்பி நிற்கும்.

இது மட்டுமா? விசித்திரமான வேறு பல வேதனைகளும் வந்து சேர்ந்தன.

அவரது பிள்ளைகள் இருவரும் அவரிடம் வந்தனர்.

"அப்பா, உடம்பு எப்படி?" என்று கேட்டான், பதவிநாதன்.

"மோசமான நிலைதான்!" என்றார் டாக்டர்.

"பிழைப்பது சங்கடம் என்று சொல்லுங்கள்!" என்றான் பணநாயகம்.

"அப்படியில்லை, முயற்சித்தால் முடியாமல் போகாது. பிழைத்து விடுவார்!" என்றார் டாக்டர்.

இருவர் முகமும் மாறிவிட்டது.

'பிழைத்து விடுவாரா?" என்று உரக்கக் கூவினர்.

டாக்டருக்கு ஆச்சரியமாக இருந்தது. தகப்பன் பிழைத்துவிடுவார் என்று கேட்டு மகிழ்ச்சியடையாமல் பிள்ளைகள் ஏன் இப்படி அதிசயப்படுவானேன் என்று அவருக்குப் புரியவில்லை.

அவர்கள் இருவரும், டாக்டரை நெருங்கி வந்தனர்.

"அப்பாவைப் பிழைக்க வைக்க, அப்பா எவ்வளவு தருவதாகக் கூறினார்?" என்றனர்

'நான் இதற்குப் பணம் வாங்குவதாக இல்லை!"

"இல்லை—நீங்கள் வாங்கிக்கொள்ளத்தான் வேண்டும்"-என்று அவர்கள் பிடிவாதம் செய்தனர்.

"அவர் பிழைத்த பிறகு......" என்று இழுத்தார் டாக்டர்.

'அவர் பிழைப்பதா—அவர் சாக வேண்டும். அதற்கு எவ்வளவு பணம் வேண்டுமானாலும் தருகிறோம்" என்றனர், கெஞ்சமுடன், நெஞ்சில் ஈரமின்றி!

டாக்டருக்கு அளவிற்கு மீறிய ஆத்திரம் வந்துவிட்டது.

"அவரால் அடையவேண்டிய இலாபம் அடைந்துவிட்டீர்கள் — இனி அவர் சாகத்தான் வேண்டும். அடடா! நன்றிகெட்ட நாய்களே, வெளியேறுங்கள்!" என்று கூவினர் அந்த இருவரும் 'பேந்த பேந்த' விழித்தனர். பயத்துடன் வெளியேறினர்.

பிறகு அவர் மகள் வந்தாள். அவள் தனது மயக்கவிழிகளை, டாக்டர்மீது வீசி, கொஞ்சுமொழிகளால் கெஞ்சிக்கேட்டுக்கொண்டாள்.

"டாக்டர் சார், எங்க அப்பா, கொஞ்சநாள்வரைப் படுத்தபடுக்கையாகவே இருக்கும்படிச் செய்ய வேண்டும்—அந்த உதவிக்கு நான் எதையும் தருவேன்" என்று கூறினாள். டாக்டருக்கு சித்தங்கலங்கி விடும்போலாகிவிட்டது!

பிள்ளைகள், கொல்லச் சொல்கின்றனர். மகளோ, பிழைக்கவும்விடாது சாகவுமடிக்காது சித்திரவதை செய்யச்சொல்கிறாள்

'ஏன்?' என்றார் டாக்டர்.

"அவர் இறந்துவிட்டால், அண்ணன்கள் ராஜ்யம் ஆரம்பித்துவிடும். பிழைத்து எழுந்து நடமாட ஆரம்பித்துவிட்டாலோ, என்னைக்கண்டிக்கத்தொடங்குவார். ஆகவே அவர் உயிருடனிருக்கவேண்டும், அண்ணன்மாரை எதிர்த்துப் போராட, பிழைத்து நல்ல நிலையை அடையக்கூடாது, நான் பட்டத்து ராணிபோல காலங்கழிக்க!" என்று கூறினாள் சுயநலப்பா.

"அம்மா, தயவுசெய்து நான் வைத்தியன் — என்வேலையைத்தான் நான் செய்யமுடியும் — ஆகவே தாங்கள் செல்லலாம்" என்று கூறினார்.

அவள் ஏமாற்றத்துடன் திரும்பினாள்.

அவரோ, இவரை நாக்கில் நரம்பின்றித் திட்டினர். டாக்டருக்குச் சோர்வாயில்லை. என்வரும்! அவர் பித்தர், பிதற்றலைக் கேட்டு யார் கோபிப்பார். அதனால் அவர் நிலை எவ்வளவு பரிதாபகரமாக மாறிவிட்டது.

"சித்தந்தெளிய எவ்வளவோ மருந்துகள் தருகிறோம்-இன்னமும் பிரயோஜனமில்லையே—ஊம்—முயற்சிப்போம்" என்று எண்ணியவண்ணம், டாக்டர் தன் அறைக்குச் சென்றார்.

பித்தரான வைத்தியரோ, தினமும் திட்டுகிறார் — தூற்றுகிறார் — ஆனால் டாக்டரோ, சிரித்தபடி மருந்து கொடுத்துக் கொண்டிருக்கிறார்.

காஞ்சி

திராவிட மறுமலர்ச்சிக் கழக
(தி. மு. கிளைக் கழக)

மூன்றும் ஆண்டு விழா

மார்ச்சு 9, 10, 11 தேதிகளில்

இயக்க முன்னணி வீரர்கள் கலந்துகொள்வர்.

நாகூர் ஹனீபா, செல்லமுத்து இன்னிசை உண்டு.

11-3-51 சி. என். ஏ. தீட்டிய "காதல்ஜோதி" வழக்கு வாபஸ் நாடகங்கள்.

இடம்:- மறுமலர்ச்சிக் கழகம். கட்டணம் கிடையாது.

டி. சபாபதி
செயலாளர்.

திராவிட நாடு
ஞாயிறு] 4—3—51 [காஞ்சி

இடம் வேண்டும்

✲

உணவு

உடை

இடம்

மூன்று தேவைகள்—மனிதனுக்கு! அடிப்படைத் தேவைகள், இன்றியமையாது வேண்டப் படுபவை, இவை.

மக்கள் கேட்பது மூன்று—இந்தத் தேவைகளைத் திருப்திப்படுத்துவதே சுதந்திர வாழ்வு!

ஆள்வோர், இந்த அடிப்படைப் பிரச்சினையை அறிந்திட வேண்டும்.

அடிமை நாடுகளிலே, இந்த அடிப்படைத் தேவைகளை, ஆளும் எதேச்சாதிகாரிகள் அலட்சியப்படுத்தலாம்.

ஆனால், சுதந்திர மொழியினில், சுதந்திரம் என்று பேசி, சுயராஜ்யம் கண்ட சுதந்தர வீரர்களின் ஆட்சியிலே இந்தத் தேவைகளைத் தட்டி நடக்க முடியாது—நடக்கக் கூடாது.

மக்களாட்சி என்று கூறிவிட்டு, மக்களின் சாதாரண தேவைகளை பூர்த்தி செய்ய முடியவில்லையென்றால் எப்படி ஒப்புக் கொள்வது, அதனை மக்கள் ஆட்சி யென்று!

மூன்று தேவைகள் — வாழ்க்கையின் முக்கிய பிரச்சினைகள்!

தீர்த்திடத் துணிவில்லாத ஆளவந்தார், 'வாழ்வு தர முடியவில்லை' யென்று கூறி வெளியேறிட வேண்டும்.

X X X

உணவு கேட்கின்றனர் மக்கள்.

காங்கிரசாட்சியாளர், நிர்வாகத்தை ஏற்று நான்காண்டுகள் ஆகியும், உணவுப் பிரச்சினையை ஒழுங்கு படுத்த முடியவில்லை.

ஏழு அவுன்ஸ் என்று ஏசுகீதம் பாட விட்டுவிட்டனர்.

புளியங்கொட்டையைப் புசி, பருத்திக் கொட்டையைச் சாப்பிடு, என்று கூறியும் அனாவிற்கு நூக் கோலைல் போக்கில் ... கொண்டனர்.

இவ்வளவு ... எதிர்த்துக் காட்டினால், சமீபமாய் வின்றனர்-திட்டக் கற்றுக் கொண்டார்கள் இவர்கள், இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க திட்டம் தீட்டிவிட்டாலும், என்று கூறினால் அதனால் மக்கள் அடங்கி விடுவர் என்று எண்ணிக் கொண்டு!

'ஆள்வோரின் வேலை அது — ஆகட்டும், நீங்கள் தாருங்கள் உணவு' என்றனர் மக்கள்—ஆளவந்த காங்கிரசோ விழிக்கிறது!

நிலைமையைச் சமாளிக்க, நாம் சொல்லிவந்த திட்டத்தைக் காலங் கடந்து பின்பற்ற ஆரம்பித்தனர். வெளிநாடுகளிலிருந்து உணவுப் பொருள்களை வரவழைக்கச் சொன்னபொழுது மறுத்தார்கள், இப்பொழுது தருவிக்கிறார்கள். இருந்தாலும் தவிக்க வேண்டியிருக்கிறது.

* * *

ஆடை கேட்டு, நாம் கேட்கின்றனர்—அதுவும் காங்கிரஸ் சர்க்காருக்கு பிரச்சினையைப் புரிந்து கொள்ளவும் சக்தியில்லை எங்கே இவர்கள் நூல் தரப் போகிறார்கள்!

ஊருக்கு ஊர் அறப்போர் — நூல் வேண்டும், நூல் வேண்டும் என்று மறியல் செய்கின்றனர்.

நுணுக்க அறிவுள்ளவர்கள், இம் மந்திரி அறப்போர்கள் சிறு பொறிகள்போல, இவை பெருந்தீயாக மாறும் என்று எச்சரித்தால், இவர்களுக்குக் குறை சொல்வதே வேலை, அதர்க்கவாதம் பேசியே பழக்கப்பட்டவர்கள் என்று கூறிவிட்டுப் பெருமூச்சு விடுகின்றனர். அதனால் நூல் கேட்கும் மக்கள், திருப்தியடைந்து விடுவார்களா, என்ன!

"வீட்டுக்கு வீடு சோறாக்கி, கறி சமைத்து, சத்திரத்திற்கு அனுப்பி விட்டு, பிறகு, ஊர் மக்கள் எல்லாம் சத்திரத்து அய்யரிடம் சீட்டு வாங்கிக்கொண்டு போய்ச்சாப்பிட வேண்டும்" என்று திட்டமிட்டனராம், மந்தமதியூர் என்ற ஊரில்!

"நம் வீட்டிலே சமைத்ததை நாம் ஏன் அனுப்பவேண்டும் - அப்படி அனுப்புவது தேவையென்றாலும், வீட்டிலுள்ளோர் அனைவரும் உண்டு முடித்த, மிதந்ததை, பொதுக் காரியத்திற்கென்று அனுப்புவதுதானே முறை" யென்றான் ஒரு தெளிந்த சிந்தனைக்காரன்.

"போடா போக்கிரி. ஊர் ஒற்றுமையை குலைக்கிறாய் — எல்லாரும் சேர்ந்துண்பதிலே என்ன சுவை" என்று கேட்டனராம் அந்த ஊரார்.

'நம்ம வீட்டிலே சமைப்பது நமக்குப்போதுமானது மட்டுமல்ல—மிகுதியும் படும் ஆனால் சத்திரத்து சீட்டு வாங்கிச் சாப்பிடப் போனால், அரை வயிற்றுக்கும் போதுமானதாக இருப்பதில்லையே" என்றான் அவன்.

ஊரார் விழித்தனர்—சத்திரத்து அய்யருக்குக் கொஞ்சம் பயம் வந்தது.

மந்தமதியூர் மக்களல்ல, நம் நாட்டோர்—நூலை 'டெல்லி'க்கு அனுப்பி விட்டு, இங்கு அலறித் துடிப்பதற்கென்று நாம் சொன்னோம்—கேட்கவில்லை. இப்பொழுது உணர ஆரம்பித்துவிட்டனர்.

உடை தரவும் முடியவில்லை, இந்தக் காங்கிரசாட்சியால் — ஆனாலும் சுதந்திர சர்க்கார் என்று மட்டும் கூறத்தவறுவதில்லை.

* * *

உண்ண உணவில்லை உடுக்கவோ, பழங் கந்தலுக்கும் வழியில்லை — இருக்க ஒரு சிறு குடிசை கட்டவும் இடமில்லை என்று மக்கள் கூறித் தவிக்கும் நிலை இன்றும் மாறவில்லை.

உறையுள் — ஏற்ற அளவில், நாட்டு மக்களுக்குத் தர முடியவில்லை.

இடம் வேண்டும் என்கின்றனர் மக்கள்—இடந்தரமாட்டேன் என்று கூறுகின்றனர் ஆளவந்தார்.

கோட்டையிலே வாழ்கின்றனர் சிலர், ஆனால் சிலர் தங்கியிருக்க ஒரு 'சிறு நிழலும்' இல்லாமல் அழுகின்றனர்.

எட்டடுக்கு மாடி கட்டி வாழ்வோரும் உண்டு, எட்டடிக் குடிசையிலே ஏங்கித் தவிப்போர் ஏராளம்.

இந்தக் கோர ஏற்றத் தாழ்வை விட, இருக்கவே இடமில்லாது தவிப்போர் உண்டென்றால் எப்படி சகிப்பது, இந்தக் கொடுமையை!

அதுவும் பெருநகரங்களிலே இந்த அநியாயம் பார்க்கவே முடியவில்லை — ரோட் ஓரங்களிலே குடும்பம் நடத்துகிறார்கள் மக்கள் — மக்கள்

நடந்து செல்லும் பாதை ஓரத்திலே, வெயிலிலும், பனியிலும், மழையிலும், குளிரிலும் தங்கள் வாழ்வை நடத்துகிறார்கள்.

பெருநகரங்களில் வீடு கிடைக்கவில்லை. இருக்கும் இடங்களோ, பன்றிக்குட்டிகள் தங்குமிடம்போல மக்கள் அடங்கிக்கிடக்கும் கிடங்குகளாக உள்ளன என்றால்கூட, தாங்கிக்கொள்ள முடிகிறது. நம் இதயத்திற்கு அந்த அளவு வலிமை இருக்கிறது.

ஆனால், இருக்கவே இடமில்லையென்கிறபொழுது, நம்மால தாங்கிக்கொள்ளமுடியவில்லை.

இடம் வேண்டும் என்கிறவர்களுக்கு இடந்தரமுடியாத இந்த ஆளவந்தார் ஏன், வெட்கமின்றி ஆள்வோராக உலவவேண்டும்என்றுதான் நமக்குப் புரியவில்லை.

X X X

சென்னை நகரிலுள்ள வீடில்லாத ஏழைகள், கோட்டைக்கு முன்னால் கூட்டமாக நின்றுகொண்டு கூவினர்.

இருக்க இடம் வேண்டும் என்று கேட்டவண்ணமிருந்தனர்.

இடம் வேண்டி, மறியல் செய்தபடி உள்ளனர்.

உணவு தரவில்லை, உடைக்கும் வழியில்லை — இருக்க இடமில்லையென்கிறார்கள் ஏழைகள். அதற்கும் மறியல் செய்யத் தொடங்கிவிட்டனர்.

நாம் இதனை எடுத்துக்காட்டினால், திட்டுகிறோம், என்று தவறுதலாகக் கூறுகிறார்கள்.

திட்டுபவர்கள்—திட்டந்தரட்டும் என்று கூறிவிட்டு, மக்கள் பார்வையிலிருந்து தப்பிவிடலாம் என்று எண்ணுகிறார்கள்-மனப்பால் குடிக்கிறார்கள்—அதுதான் தவறு. அவர்கள் இருக்கும் ஆட்சிப்பீடம், எல்லோர் கண்களிலும் படக்கூடியது—அதிலிருந்துகொண்டு ஒளிந்துவிட முடியாது!

ஏழைகள், இடம் வேண்டும் என்கிறார்கள்.

வீடில்லாதவர்கள். கோட்டைக்கு முன் மறியல் செய்கிறார்கள்.

கோட்டையில் வாழ்வோர்கள் பார்வைக்கு நாம் கொண்டுவரும் திட்டங்கள் என்ன ஆகும்! அதனை நடைமுறைத் திட்டமாக்கும் திடமனது உண்டா என்பதுதான் நமக்குத் தெரியவில்லை.

திட்டம் கேட்கும், திருவாளர்களுக்கு திட்டம் காட்டுவோமே—செய்வார்களா?

இடம் வேண்டும் என்றுதானே மக்கள் கேட்கிறார்கள்—இடத்தைக் காட்டுகிறோம்.

கோயில்கள் இங்கு பல உண்டு—அங்கு ஏழைகள் தங்கலாம்.

இறைவன், இந்த நிலையை வரவேற்பார்—வரவேற்பதுமட்டுமல்ல, தனது பிள்ளைகளுக்கு இடந்தர மறுக்கமாட்டார்!

அதுவும் வௌவால்களும், பெருச்சாளிகளும் கூடிக்கும்மாளம்போடும் இடங்கள் எத்தனையோ உண்டு, கோயிலுக்குள்ளே—இம்மாதிரி இடங்களைத் தூய்மைப்படுத்திடவும் அதுவே ஏழைகளுக்கு வாழுமிடமாகவும் இருப்பதிலே என்ன தடை இருக்கமுடியும், ஆண்டவனாகட்டும் ஆளவந்தாராகட்டும் என்ன மறுப்புத் தரமுடியும்!

இடம் வேண்டும் என்றிடும் ஏழைகளுக்கு இடந்தரட்டும் — இல்லாவிட்டால், ஆளத்தெரிந்தவர்கள் ஆள்வதற்காவது இடந்தரட்டும்

"வாழ்வைப் பறிப்போர் நாங்கள். ஆனாலும், ஆளவும் நாங்களே இருப்போம்" என்றால மக்கள் ஏற்றுக்கொள்ள முடியாது இந்நிலையை!

உணவு இல்லை, உடை தரமுடியவில்லை — இடமும் இல்லை — என்றால், ஆளவந்தார்களைப் பார்த்து நாம் கேட்பதெல்லாம், நல்லாட்சி நடத்தும் திறமை மிக்கவர்களுக்கு ஆட்சிப் பீடத்திலே இடம் வேண்டும் என்று! இடம் வேண்டும்-இடம் தந்து விலகட்டும்!

—X—

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆகவேதான், டாக்டர் நினைப்பு வந்தாலே கோபம்—அவரைப்பற்றி பேச்செடுத்தாலே, திட்டல், தூற்றல்—என்ன செய்வது? நிலைமை அப்படியாகிவிட்டது — அவரை தொந்துகொண்டு பயனில்லை.

டாக்டரின் செல்வாக்கை எப்படி ஒழிப்பது என்று எண்ணி எண்ணிப் பார்த்தார்—வழி தெரியவில்லை.

இரண்டு வைத்தியர்கள், ஒரு ஊரில—ஒருவர் வளரும் நிலைமையில, மற்றொருவர் சரியும் போக்கில் என்றால என்ன செய்வது? சாயும் செல்வாக்கிலே உள்ளவர், மற்றவரின் புகழைக் கெடுக்க முயற்சிசெய்வது இயற்கை. ஆனால் அதற்கு எடுத்துக்கொள்ளவேண்டிய முயற்சி முக்கியமானது!

நேர்மையான வழியில் செல்ல வேண்டுமானால், மற்றவரின் மருந்துகளிலே உள்ள குறைகளை எடுத்துக் காட்டலாம் — அவரது சூரணம் சக்தியில்லாதது என்று நிரூபிக்கலாம்—மாத்திரைகள், ஊரை ஏமாற்றும் சர்க்கரை உருண்டைகள் என்று விளக்கலாம்—அவர் சொல்லும் மூலிகைகள், எல்லாம் வீட்டுத் தோட்டத்து வேலிபோரக் கொடிகளிலே பறித்த இலைகள் என்று இப்படிக் கூறினால் மக்கள் ஒப்புவர்.

தனக்குப் பிடிக்கவில்லையென்றால், உடனே திட்டித் தீர்த்துக் கொள்வது, என்பது, மிக மட்டமான முறை — ஆத்திரத்தை அடக்க, பெண்கள் ஒப்பாரியைப் பயன்படுத்திக் கொள்வதைப் போல!

தேசியனார் அந்தப் போக்கையே கையாண்டார்—அதுதான் வருந்தத்தக்கது. அவர், மிகவும் அனுபவம் உள்ளவர் என்று ஊர் சொல்கிறது. எல்லோரும் நம்பினர். ஆனால் அவர் கையாண்ட முறையோ, கீழ்த்தரமானது—எவரும் எதிர்பார்க்காதது—அதுவும் அவ்வளவு காலம், வைத்தியத் தொழிலில் ஈடுபட்டு, பண்டாரத்தையா என்று பரிவோடு அழைக்கப்பட்ட அவரிடமிருந்து எதிர்பார்க்காத முறையிலே, அவர் இறங்கி, டாக்டரைத் திட்டித் தன் மனதிற்குச் சாந்தி தேடலானார்.

* * *

அவரது பிள்ளைகளில் ஒருவன் பெயர் பதவிநாதன்—மற்றொருவன் பணநாயகம். இவர்கள் இருவரும் போட்டுக் கொள்ளும் போட்டா போட்டியை அவரே பார்க்கவும் கூசினார். அவரது மகன் சுயநலமோ தந்தை வீட்டையே கதியென வந்து உட்கார்ந்து கொண்டு அதிகாரம் செய்ய ஆரம்பித்து விட்டான்.

அவரது மனைவி தியாகவல்லி மட்டும், அவருக்கு அடிக்கடி அறிவுரை கூறுவாள். அதனை அவர் ஏற்றுக் கொள்வதில்லை.

முதலில் நம் வீட்டைத் திருத்துங்கள் — வீடாகவே இல்லை — சுடுகாடாகிவிட்டது.

பிறர் வீட்டைப் பற்றி மெல்லப் குறை சொல்லக் கிளம்பி விட்டீர்கள் — அது, கண்ணாடி வீட்டிலிருந்து கல்லெறிந்த கதையாகி விடும்.

தொழில் தான் சரியில்லையென்றால், இதுவரை இருந்து வந்த பெயரையும், புகழையும் காற்றில் பறக்கவிடவேண்டாம்.

டாக்டருக்கு அதிக மதிப்பென்றால், இருக்கட்டுமே — மற்றொரு காலத்தில் அப்படி பிறர் பொறாமைப் படுகிற அளவில் மதிப்பில்லையா?

அவர் மனைவி இப்படி உண்மை உபதேசம் புரியும் பொழுதெல்லாம் சீறி விழுவார்.

அவர் இழந்த செல்வாக்கை எப்படியும் பெறுவேன் என்று அந்த மட்டமான முறையில் இறங்கிவிட்டார்.

அவரது மனைவி தடுத்தார் — கேட்கவில்லை.

வீட்டிலுள்ள பிள்ளைகளோ, அப்பாவை எவ்விட்டு வேடிக்கை பார்த்தனர். வயதான காலத்தில் வரிந்து கட்டிக்கொண்டு அவர் டாக்டரைத் திட்டும் திருப்பணியிலே தீவிரமாக ஈடுபட்டார்.

டாக்டர், இதுபற்றிய சஞ்சலம் சிறிதுமின்றித் தன் போக்கிலே, நாடுண்டு. நாட்டுமக்களுக்கு நாம் செய்வோம் நல்ல தொண்டென்று, தன் கடமையைச் செய்துகொண்டிருந்தார்.

தியாகனார், வீண்வம்புக்கு அழைத்தார் — டாக்டர் சிரித்துக்கொண்டே தனது பாதையில் நடந்தபடி இருந்தார்.

அவர் தன் மருந்துகளைச் சரியில்லையென்று சொல்லக்கூடாது என்று கூறினார் - தானும் ஒரு வைத்தியராக இருப்பதால் சொல்லவேண்டியிருக்கிறது என்றார் டாக்டர், சாந்தமாக.

அவரது திட்டுதல் தீவிரமானதற்குரிய காரணம் வேறொன்றுண்டு. ஊர்ப்பொது மருத்துவ நிலையத்திற்கு யாரை அமர்த்துவது என்று ஊரார் கூடிப்பேசும் நாள் நெருங்கிக் கொண்டிருந்தது ஆகவே தான் வைத்தியருக்கு அந்தத் தேர்தல் சுரம் அடிக்க ஆரம்பித்துவிட்டது.

டாக்டரோ, மிகத்தெளிவாகஎடுத்துக்கூறிவிட்டார், தான் அந்தப் போட்டியில்கலந்துகொள்ளப்போவதில்லையென்று! இருந்தும், அவருக்கு அதிசயம் — எனவே திட்டினார், திட்டினார், திட்டிக்கொண்டே இருந்தார்.

* * *

தேர்தல் நெருங்கிக்கொண்டே இருந்தது - வைத்தியர் தேடனரின் சிந்தனையோ குழப்ப ஆரம்பித்து விட்டது.

முதலில் ஆரம்பித்த தேர்தல் சுரம், பித்தசுரம்போல, அவரைப் 'பிணைக்கும்படி' விட்டுவிட்டது. கண்டபடி உளறத் தொடங்கிவிட்டார்.

பிள்ளைகளோ, தந்தையைப்பற்றிய கவலையே இல்லாது, 'அகப்பட்டவரை சுருட்டடா, ஆண்டியப்பா' என்ற கிராமியவாக்கியப்படி நடந்துகொண்டனர்.

மகளோ, தந்தை இறப்பதற்குள் எவ்வளவு கொண்டுசெல்ல முடியும் என்ற ஆராய்ச்சியிலும், அதனை நடைமுறையாக்குவதிலும் ஈடுபட்டு விட்டாள்.

அவரது மனைவிக்குமட்டும், மனம் கேட்கவில்லை அவரது சுரத்தை நிறுத்த முயற்சித்தாள். அவளோ, வைத்தியர் — அவள் வைத்தியரின் மனைவிதானே — ஆகவே, மருந்து பாட்டில்கள் பல இருந்தும் தெரியவில்லை,

யோசித்தாள் — யோசித்தாள் — அதற்குள் சுரவேகம் மிக வளர்ந்து விட்டது.

கடைசியாக அவள் வந்த முடிவு தான் பயங்கரமானது — தன் கணவனின் எதிரியிடமே, அவரை மருத்துவத்திற்கு அழைத்துச் செல்வது என்று தீர்மானித்தாள்.

சுரத்துடன் போராடும், தன் கணவனிடம் சொல்லும் பொழுதே அவர் சீறினார் — துடித்தார். இருந்தாலும், மனைவி விடவில்லை. அழைத்துச் சென்றாள்.

டாக்டர், இவரைக் கண்டதும் மிக 'அன்புடன்' வரவேற்றார். அமரும்படி இருக்கை தந்தார்

பிறகு முறைப்படி நோயாளியைப் பரிசீலனை செய்தார். அதற்குக்கூட அவர் சரியாக இடங்கொடுக்கவில்லை

பரிசோதித்து முடிந்ததும், டாக்டரின் முகம் விசாரமாக மாறிவிட்டது. ஏன்? அவர் கூறினால் அல்லவா, நமக்குத் தெரியும்!

"அம்மா, தங்கள் கணவருக்கு மனக்கொதிப்பு அதிகம்"

"இருக்கும்"

"அதனால், சிந்தனைத் தெளிவு மங்கி வருகிறது"

"அப்படியென்றால்......"

"புத்தி சுவாதீனம் வரவர..."

"என்ன.......?"

"ஆம், அம்மையே, அவர் பித்தராகி வருகிறார்!"

"ஐயோ......உண்மையில் சொல்கிறீர்களா, அல்லது உங்கள் பகைவர் என்பதற்காக இப்படிக் கூறுகிறீர்களா?"

"இல்லை, தாயே, உண்மை"

டாக்டரின்வார்த்தைகளைக்கேட்டதும் அவள் நடுங்கிப் போனாள். என் செய்வது?

வைத்தியர் பித்தரானார்! ஆம், உண்மைதான் என்று எவரும் கூறும்படி அவர் நடந்திடத் தொடங்கினார்.

டாக்டரின் மருத்துவ மனையிலே

(5-ம் பக்கம் பார்க்க)

ஆணித்தரமான கட்டுரைகள்! அரிய கருத்துரைகள்!
தி. மு. க. இளைஞர்களுக்கோர் செந்தேன்!
"பிராக்ரஸ்"
ஆங்கில வார இதழ்
மாணவ மணிகளுக்கோர், களஞ்சியம்!
தோழர்கள் ஆதரவே 'பிராக்ரஸ்'சின் வளர்ச்சி.
"பிராக்ரஸ்" முத்துமாரி செட்டித்தெரு, மண்ணடி, சென்னை

4-ம் பக்கத் தொடர்ச்சி

மறைக்காது, தனது 'தொழிலை' அவன் வெளியிட்டிருக்கிறான். வேதனை நிரம்பிய நிலை! வாழப் பிறந்த மனிதன், அவன். ஆனால், வயிற்றுக்கொடுமை அவனை திருடனாக்கியிருக்கிறது.

எத்தனை கோரமான நிலை!

சுயராஜ்யம் என்று தோள்தட்டிக் கொள்கிறோமே—இந்தக் காட்சியை கவர்னர் கண்டிருக்கிறார், தேசிய இதழ்களும் பிரசுரித்திருக்கின்றன—இத்தகைய இழிநிலையில், நாடு இருப்பதுதான், சுதந்திரமா? சுக வாழ்வா? பாரத மணித் திருநாடு என்று பண் பாடிவிட்டால் போதுமா, இந்தப் பஞ்சைகளின் வாழ்வு விளக்கு ஒளிபெற வேண்டிய வழிவகைகளைக் காண வேண்டாமா? வாட்டும் பசியும், கூட்டிடும் இன்னலும் வதைக்க திருடனாகி, கேம்பி, போலீசின் தடிக்கோ அல்லது பொல்லாத சிறைக்குள்ளோ, அவன் வீழ்ந்து மடியத்தான் பிறந்தானா?

கேட்கவே செய்வர், பலனை எதிர்பார்த்து, பாலும் தேனும் வழியும் என்று எதிர்பார்த்த பொதுமக்கள்.

இதுபோன்ற கேள்விகள் இப்போது நாட்டின் நாலு பக்கங்களிலும் எழும்பாமலில்லை!

எனினும், மந்திரிமார்கள், இது பற்றிச் சிந்தித்ததாகவோ சிரத்தை கொண்டதாகவோ, தெரியவில்லை!

ஆனால், அதற்காக அவர்கள் ஓய்வுபெறாமலுமில்லை; நாள் தோறும்—நாடுவலம் வருதலும் நடைபெறாமலில்லை.

"இந்தியாவின் எதிர்காலம் உன்னதமானது. பாரதநாட்டின் புகழ், பாரெல்லாம் பரவிக் கொண்டிருக்கிறது நம்ம சர்க்காருடன் ஒத்துழையுங்கள்!" என்று பல்லவி பாடுவதும், ஓடுங்கிவிடவில்லை.

நாட்டில் ஏழ்மை!

நாடாள்வோரிடமோ ஊழல்!!

பீடமேறியிருப்போரிடையே நிர்வாகச் சக்தியின்மையும், ஊழலும் நிறைந்து கொண்டே போகின்றன.

ஆகவே, நிர்வாகச் சக்கரம் சீர்கெட்டு வருகிறது.

அதிகாரிகளிடையே அசிரத்தை! "நமக்கென்ன? நாம் ஒன்று செய்ய நினைத்தால், மந்திரி தலையிட்டு வேறொன்று செய்யச்சொல்கிறாரே!" "அவர் சொல்வதுபோல நடந்துவிட்டுப் போவோம். எதிர்த்து வார்த்தையாடுவதால் என்ன இலாபம்?"

இதுபோன்ற கருத்து, அதிகாரிகளிடையே அதிகரித்துவிட்டது.

உண்மையில், அதிகாரிகள் வெறும் பொம்மைகளாகவே ஆக்கப்பட்டு வருகின்றனர்.

—எம். எல். ஏ வுக்குத் திருப்தி!—

—மந்திரிக்குத் திருப்தி!—

—காங்கிரஸ் பிரமுகருக்குத் திருப்தி!—

—காங்கிரஸ் தலைவருக்குத் திருப்தி!—

தரக்கூடிய விதங்களில், நடந்து கொள்வதுதான், புத்திசாலித்தனம் என்ற எண்ணம், அதிகார அம்புகளிடையே இந்த மூன்று ஆண்டுகளில் மிக மிக அதிகமாகிவிட்டது.

இந்த வேதனை மாற்றம் தான், இன்றுள்ள சூழ்நிலையில் எதிர்காலத்தை மிகவும் பாதிக்கக்கூடியதாகும்.

சுயநலகாரியங்களுக்காகச் சர்க்கார் அதிகாரிகளைப் பயன்படுத்திக் கொள்வது என்பதும், அதற்கேற்றவாறு நடந்துகொள்வதே தங்கள் கடமையென்று அதிகாரிகளிடையே மனப்பான்மை வளருவதும், நல்லதல்ல

காங்கிரஸ் சர்க்கார், தனது திறமையற்ற திட்டங்கள் மூலம், நாட்டைப் பாழ்படுத்தி வருகிறது.

நினைத்தபடியெல்லாம் உத்திரவு! நினைத்த நேரத்திலெல்லாம் கட்டளை என்ற போக்கால், நிர்வாகம் சீர்குலைந்துவிட்டது.

நேர்மை! நாணயம்! என்ற வார்த்தைகள், பொருளற்றவையாகி வருகின்றன.

எந்நாடும், சிறப்புற்று விளங்க வேண்டுமானால், அந்நாட்டை நிர்வகிக்கும் அதிகாரிகள் சுதந்திர நிலையும், தங்களுக்குத்தரப்பட்ட பொறுப்பை நிறைவேற்றும் கடமையுணர்ச்சியும் கொண்டவர்களாகஇருக்கவேண்டும்.

பிரிட்டிஷ்காரன், இந்தியாவுக்குப் பல தீமைகள் செய்திருந்தாலும் திறமை பொருந்திய அதிகார அம்புகளைத் தந்துவிட்டுத்தான் போனான்.

ஆனால், அந்த அதிகாரிகள், இன்று இலஞ்சம் பஞ்சமோல ஆகிவிட்டார்கள்!

மந்திரிகள் மிரட்டல்! எம் எல் ஏ தாக்கீது! காங்கிரஸ் பிரமுகர் கட்டளை — இத்தனையையும், கவனிக்க வேண்டியது, அதிகாரிகளுடைய அன்றன்றாட அலுவல்களில் அதி முக்கியமானதாகிவிட்டது.

இந்த நிலை, எதிர்காலத்தைக் கற்பாறைகளிலே மோதுவதாகும்.

காங்கிரஸ் ஆட்சி—நிரந்தரமானதல்ல.

ஆனால், நிர்வாகச் சக்கிரம் எப்போதும் இருக்கும்.

ஒழுங்குப் பாதையில் ஓடவேண்டிய உருளையை ஓட்டைமயமாக்கிவிட்டால், அதன் எதிர்கால விளைவுகள் சாதாரணமாயிராது.

"எல்லாம் எங்களுக்குத் தெரியும்!" என்ற கர்வத்துடன், நமது மந்திரிமார்கள், நடந்து கொண்ட முறைகளால் ஏற்பட்ட விபரீதங்களை நாடு அறிந்து கொண்டே வருகிறது.

இதே மனப்பான்மையில், நாட்டைக் குட்டிச்சுவராக்கும் மனப்பான்மையில், அதிகாரச் சக்கரத்தையும் உருப்படாததாக, ஆக்கி வைக்கும் 'கைங்கர்யம்' வளராமற் செய்தால், இந்த ஆட்சியாளர். பெருத்த நன்மையைச் செய்தவராவர்!

தங்கள் சுயநல, சுகபோகக்காரியங்களுக்காக அதிகாரிகளை உபயோகிப்பதும்—புதுப் புது உத்திரவுகளால் அவர்களுக்குப் பொல்லாங்கு செய்வதும்—தங்களிஷ்டப்படி அவர்கள் நடந்தால் போதும், என்ற எண்ணத்துக்கேற்றவாறு நடப்பவர்களைத் தட்டிக் கொடுத்து 'தாஜா' செய்வதுமான போக்கு, நல்லதல்ல.

எதிர்காலத்தை, காங்கிரஸ் மந்திரிகளுக்குக் காட்டிச் சொல்கிறோம்.

இன்றைய நிர்வாகம், குரங்கு கை பூமாலை—போல, ஆகிவிட்டது.

இதை, இன்னும் மோசமாக்காதீர்கள்

"ஞாயிறு"

[மாதமிருமுறை]

ஆசிரியர்: ஏ. சே. வேலன்

இணை ஆசிரியர்: தாமரைச்செல்வன்

தனிப் பிரதி அணா மூன்று

விற்பனையாளர் தேவை

"ஞாயிறு" காரியாலயம்,

(A) தஞ்சை.

பித்தரானார், வைத்தியர்!

[தில்லை-வில்லாளன்]

டாக்டர், பகுத்தறிவாளன் நாட்டிலே மிகசெல்வாக்கான மருத்துவர். தீராத வினையெல்லாம் தீர்த்து வைப்பார் அவர் என்று ஊரார் புகழ்ந்து பேசாத நாளில்லை

நாட்டு மக்களை நடுங்கும், பல கொடிய வியாதிகளை விரட்டியடித்து வெற்றி கண்டவர் அவர்–ஆகவே, அந்த ஊரே, 'டாக்டர்' என்றாலே, ஊரிலே பலர் மருத்துவம் பார்ப்பார்ப்பவர்களிருந்தும், தோழர் பகுத்தறிவாளனைக் குறிக்கும் சிறப்புப் பெயராக்கி விட்டது!

ஊரார் முதலில் அவர் கூறிய மருத்துவ முறைகளை நம்பவில்லை–பிறகு கேலி பேசினர். கொஞ்ச நாள் கழித்து கண்டித்தனர். ஆனால், டாக்டரின் இடைவிடாத தொண்டால் அவரது மருத்துவமுறைகள் வெற்றியடைந்தன – கண்ட மக்கள் களித்தனர் – அவரைப் பாராட்டினர். மேலும் பலர் அவரைச் சூழ்ந்து கொண்டு புகழுரை பொழிந்த வண்ணமிருந்தனர்.

ஊரிலே ஒரு விசித்திர படை பரவியிருந்தது. உடலெங்கும் படர்ந்து அரிப்பைக் கொடுத்து, சொரிய விட்டு வேடிக்கை பார்த்தது. அந்தப் பயங்கர படை நோய்–அதன் பெயர் சாதி வெறிப்படையென்று பெயர். இதனைப் போக்க, அவர் அருமையான படை மருந்தைத் தயார் செய்தார். இதனை முதலில் மக்கள், உண்மையான மருந்தென்றே ஒத்துக் கொள்ளவில்லை. இரண்டொருவர் அம்மருந்தால் குணமடைந்ததைக் கண்ட பிறகுதான் நம்பிக்கை பிறந்தது.

மத மயக்கம் என்ற 'திடீர் மூர்ச்சை' நோய் ஒன்று ஏற்பட்டு, வெகு நாளாய்த் தொல்லைப்படுத்தி வந்தது. அதனை நிறுத்தவும், வெகு பாடுபட்டு, மருத்துவ முறையைக் கையாண்டார் – படைமருந்திற்குக் கிடைத்த வரவேற்பே இதற்கும் கிடைத்தது.

ஊரார் எல்லோருக்குமே, கடவுள் காய்ச்சல் என்ற விபரீத சுரம் அடிக்கடி வந்து வந்து போய்க் கொண்டிருந்தது–அது பலரிடம் நிரந்தரமாகவே குடிகொண்டு விட்டது. இதற்கும் அருமையான சூரணம் தயார் செய்தார், டாக்டர்.

பல சில்லரை வியாதிகள் அந்த ஊரிலே, தினமொன்று ஏற்படாமலிருப்பதில்லை சகுன வீக்கம், சாஸ்திர பித்தர், புராண வலி, இதிகாச இருமல் .... இப்படி பல வந்து வந்து போய்க்கொண்டிருந்தன.

இம்மாதிரி புதுவிதமான வியாதிகளுக்கெல்லாம் ஒரே மருந்து கண்டு பிடித்தார் மூடமதிரோக்கி என்ற சர்வ வியாதி நிவாரணியைப் பயன்படுத்தினார் ஊரார், அதன் சக்தியைக் கண்டு வியந்தனர்–அதனைக் கண்டுபிடித்த டாக்டரைப் புகழ்ந்தனர்.

டாக்டரின் புகழ் பரவ, பரவ வேறொருவருக்கு வயிற்றெரிச்சல் வளர ஆரம்பித்து விட்டது–வேறொருவர் யாராக இருக்க முடியும்! தொழில் கெட்டுவிட்டதே என்று பரிதவிக்கும் பழைய வைத்தியர் தேசியனார்.

தேசியருக்கு ஒரு காலத்தில் மதிப்பிருந்தது–அவர் அந்தப் பகுதிக்கு 'எதிர்ப்பில்லாத ஏக ராஜா' அவர் இட்டது சட்டம், நினைத்தது தண்டனை என்பதைப் போல, செங்கற்பொடியைக் கொடுத்தாலும், அதுவும், கிடைத்தற்கரிய சூரணம் என்று பேசப்பட்டது. அவருக்கு, தன் மருந்துகளில் நம்பிக்கையில்லாவிட்டாலுங்கூட, 'பிசினஸ்' நடக்க வேண்டுமே என்ற எண்ணத்தில் ஏதாவது தருவதும், இயற்கை மாறுதல்களாலேயே வியாதி தீர்ந்தாலும், அது அவரது மருந்தின் சக்தியென்று பிரச்சாரம் செய்து வந்தார்.

டாக்டர் வந்தவுடன் அவருக்கு இருந்த சிறப்பு சரிய ஆரம்பித்து விட்டது—புகழ் புகைந்துவிட்டது—மதிப்பு, மண்ணாகிவிட்டது!

ஆகவேதான், அவருக்கு எரிச்சல் ஏற்பட்டுவிட்டது – எரிச்சல், முதலில் ஆத்திரமாகத்தானே வடிவெடுக்கும். ஆத்திரம், திட்டுதலாலேதான் வெளிவரும். ஆகவே, அவரது பாஷை, வழுக்கு நிலத்திலே நடப்பது போலாகிவிட்டது. ஒவ்வொரு அடிக்கு ஒன்பது முறை தடுக்கி விழுந்தாலும், வீரம் பேசத் தவறுவதில்லை.

தேசியனார், டாக்டர் சிறப்படைவதற்கு முன்னால், தேசிய பண்டாரத்தய்யாவாக இருந்த நேரத்தையும், அப்பொழுது அவர் வீட்டிலே கூடிக் கிடந்த கூட்டத்தையும் எண்ணி எண்ணிப் புழுங்கிப் போனார்.

அப்பொழுதெல்லாம், எத்தனை வண்டிகள் காத்துக்கிடக்கும், அவர் வீட்டின் வெளிப்புறத்திலே! இப்பொழுது அவரே, வீடு தேடிப் போகிறார் மருந்து தர! அப்படியும், டாக்டர் வந்துபோகிறார் என்று கூறி அனுப்பிவிடுகின்றனர். இந்த இரண்டு நிலையும் ஒப்பிட்டுப் பார்க்கிறபொழுது, அவர், தான் தூக்கிலே தொங்குவதுபோலவே எண்ணினார்

(7 ம் பக்கம் பார்க்க)

பொதுக்குழு கூடுகிறது!

காஞ்சியில் 11-3-51-ல் தி. மு. க. பொதுக்குழுக் கூட்டம் நடைபெற இருக்கிறது.

தி. மு. க பொதுக்குழுக் கூட்டத்திற்கான எல்லா ஏற்பாடுகளும் நடைபெறுகின்றன, வெகு வேகமாக!

'திராவிடநாடு' நிலையத்தின் மேல் மாடியிலே, பொதுக்குழு கூடியிருந்து, நடவடிக்கைகளை கவனிக்க ஏற்றவண்ணம் பந்தலமைப்பு வேலைகள் தொடர்ந்து நடைபெறுகிறது.

இதுவரை, பல உறுப்பினர்கள், பொதுக்குழுக் கூட்டத்தில் கலந்து கொள்வதாக அறிவித்துவிட்டனர். இன்னும் பலரின் கடிதங்கள் வந்த வண்ணமுள்ளன.

பொதுக்குழுவில் ஆராயவேண்டிய பலர் தீர்மானங்கள் அனுப்பியுள்ளனர்.

திருப்பார்வைக்கு

★

பலம் பொருந்திய மத்திய சர்க்காரே, இந்திய பூபாகத்துக்கு ஏற்றது-இதுபோல பலர் கூறுகின்றனர்

“ஒன்றுபட்டால் உண்டுவாழ்வே...” -என்றும், ஐக்கியமே முக்கியம் என்பதாகச் சொல்பவர்களும் உண்டு.

‘ஒரே இந்தியா என்றிருப்பதே நல்லது. அப்போதுதான் மாகாணங்கள் கவலையற்று வாழ முடியும்’ என்று ‘பேதமேன் - பிளவுமேனோ?’ என்று பேசுவோரும் இல்லாமலில்லை.

“இந்திய சர்க்காரில் இணைந்து இருப்பதால் எவ்வளவோ நன்மைகள் உண்டு. இதை அறியாமல் உளறுகின்றனரே, என்னபேதமை!” என்று ஏளனம் செய்வோரும் இருக்கிறார்கள்.

அவர்களது, திருப்பார்வைக்கு; ஒரு சேதி! அண்மையில் நமது நிதி அமைச்சர் கோபாலர் சட்ட சபையில், ஒரு தகவலைத் தந்துள்ளார். தகவல், உணவு உற்பத்திப் பெருக்க திட்டம், போர் பிற்கால அபிவிருத்தித் திட்டம், ஆகியவைகள், பற்றியதாகும்.

இந்த இருதிட்டங்களும், மாகாண நன்மைக்கானவை, என்பதை எவரும் மறக்கார்.

அதிலும், உணவுக்காக, நாம் படும்பாட்டைக்காண்போர், ‘உணவு உற்பத்தி திட்டமா! ஆகா, அது எவ்வளவு அவசியம் தெரியுமோ?’ என்று கூறவே செய்வர்.

அவ்வளவு முக்கியமான திட்டம் குறித்து, ரசமான-ஆனால் வேதனையான-ஒரு தகவலைத் தருகிறார் மாகாணநிதி அமைச்சர்.

மேற்படி இருதிட்டங்களுக்காகவும், இந்தியசர்க்கார், சென்னை மாகாணத்துக்குத் தந்துவரும் தொகை, பற்றியதுதான் அந்தத்தகவல்.

கடந்த மூன்றாண்டுகளில், எவ்வளவு தொகை, தரப்பட்டது என்பதை, அவரே விளக்கியுள்ளார்.

1947—48ல் நமக்குத் தருவதற்காக ஒதுக்கியது 625 லட்சம் ரூபாய்.

அதற்கு அடுத்த ஆண்டில, 1948-49ல், சென்னைக்கென ஒதுக்கியது 325 லட்சம் ரூபாய்.

அதற்கு அடுத்த ஆண்டில் 1949-50ல், ரூ 400 லட்சம்.

அதற்கு அடுத்த ஆண்டுக்கு 1950-51க்கு ‘ஒன்றுமில்லை!’ யென்ற, கை விரிப்பு.

மாகாணத்தின் நலனில் எவ்வளவு அக்கறை மத்திய சர்க்காருக்கு என்பதை இந்தத் தகவல் விளக்கும்!

இந்த மூன்று ஆண்டுகளில், மாகாணத்தின் நிலை, வரவர மோசமாகிக் கொண்டே வந்திருக்கிறது.

மோசம் நேராமல் தடுக்கவேண்டுமானால் போதிய பணஉதவி அளிக்க வேண்டும்.

ஆனால் இந்தியசர்க்காரோ நிலைமை கேவலமாக ஆக, தரும் பணத்தையும் குறைத்துக் கொண்டே வந்திருக்கிறது.

கடைசியில் 1949—50க்கு 400 லட்சம் பெற, தான் மிகவும் கஷ்டப்பட்டதாகவும், கூறுகிறார் கோபாலர்.

ஆனால் வரவர மாமியார் கழுதை ஆனாள் என்ற கதைபோல, கொஞ்சம் கொஞ்சமாய்த் தேய்ந்து இப்போது ‘ஒன்றுமில்லை’ என்றாகிவிட்டது.

அப்போதைப் போல, இப்போதும் நமது உரிமைகள் டில்லிக்குப் போய்க்கொண்டுதான் உள்ளன.

இருந்தும், சென்னையின் அத்யாவசியத் தேவைக்கான மான்யம் வரவரக் குறைந்து கொண்டே வந்து இப்போது ‘பூஜ்யம்’ ஆகிவிட்டது.

இந்தத் தகவலை, வேதனையோடு தான் வெளியிட்டுள்ளார் கோபாலர்.

நம்மைப் பார்த்து ‘தூற்றல் துந்துபி’ முழக்கும் திருக்கூட்டத்தின் பார்வைக்கு, கோபாலர் கூற்றை வைக்கிறோம்.

தி. மு. க. பொதுக் குழு கூட்ட அழைப்பு

அன்புடையீர்,

வணக்கம். தி. மு. க. பொதுக் குழுக் கூட்டம், மார்ச் 11-ஆம் தேதி ஞாயிறன்று, காஞ்சீபுரத்தில் நடத்துவது என்று ஏற்பாடு செய்திருக்கிறேன்.

தி. மு. கழகம் இதுவரை செய்துள்ள பணிபற்றிய ஆய்வுரை தரவும், இனி நடைபெறவேண்டிய காரியம்பற்றிய யோசனை கூறவும், தாங்கள் தவறாது அன்று வந்து கலந்துகொள்ளக் கோருகிறேன்.

(மாகாண) மாநில மாநாடு நடைபெற வேண்டியதற்கான திட்டமும் மேற்படி கூட்டத்தில் பேசி முடிவு செய்யவேண்டி இருக்கிறது.

பொதுக் குழுக் கூட்டத்திற்கு தாங்கள் வருவதற்கான சம்மதத்தை உடனடியாகத் தெரியப்படுத்துவதுடன், பொதுக்குழுக் கூட்டத்திலே பேசப்படவேண்டிய பிரச்னை ஏதேனும் தாங்கள் குறிப்பிடுவதானால், அதுபற்றியும் உடனே காஞ்சி ‘திராவிடநாடு’ நிலைய முகவரிக்கு கடிதம் அனுப்பவும்.

காஞ்சீபுரத்தில், பொதுக் குழுக் கூட்டம் சிறப்புற நடைபெற தங்கள் ஒத்துழைப்பை பெரிதும் விரும்புகிறேன்.

அன்பன்

அண்ணாதுரை

தி. மு. க. பொ. செயலாளன்.

தஞ்சை மாவட்ட தி. மு. க. முதல் மாநாடு மாயவரத்தில் மார்ச் 3, 4 தேதிகளில் நடைபெறுகிறது.

அறிவாலயப் பணிக்காக! **கலைக் கோயில் கட்டுவதற்காக!**

பச்சையப்பன் கல்லூரி அமைப்பு நிதிக்காக

★ காஞ்சியில் கலைவிழா ★

காஞ்சி பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளி மைதானத்தில்

15-3-51 முதல் 21-3-51 வரை

தினசரி இரவு

15—3—51 வியாழக்கிழமை

ஓர் இரவு

(C. N. A.)

K. R. ராமசாமி குழுவினர் நடிப்பது.

★

16—3—51 வெள்ளிக்கிழமை

துளி விஷம்

(A. S. A. சாமி)

K. R. ராமசாமி குழுவினர் நடிப்பது.

★

17—3—51 சனிக்கிழமை

அந்தமான் கைதி

(கு. சா கிருஷ்ணமூர்த்தி)

டி. கே. எஸ். சகோதரர்கள்—குழுவினருடன்

★

18—3—51 ஞாயிற்றுக்கிழமை

ஔவையார்

(எதிராஜ்)

டி.கே.எஸ். சகோதரர்கள்—குழுவினருடன்

19—3—51 திங்கட்கிழமை

மனிதன்

(ஆதிசுந்தரம்)

டி.கே.எஸ். சகோதரர்கள்—குழுவினருடன்

★

20—3—51 செவ்வாய்க்கிழமை

வேலைக்காரி

(C. N. A)

K. R. ராமசாமி, T S பாலையா,
D பாலசுப்பிரமணியம், T. P. பொன்னுசாமி,
K S. அங்கமுத்து முதலியோர்
K R R. குழுவினருடன்.

★

21—3—51 புதன்கிழமை

நாம் இருவர்

(ப. நீலகண்டன்)

T. R. மகாலிங்கம், B. R பந்துலு,
K. சாரங்கபாணி முதலியோர்
T. R M. குழுவினருடன்.

கல்வி மணம் பரவ, காணிக்கை தாரீர்!

ஏழு நாடகங்களுக்கும் மொத்தமாக சீசன் டிக்கெட்:

ஆண்கள் ரூ. 10
பெண்கள் ரூ. 5

ஒவ்வொரு நாளும்:—

ஆண்கள் ரூ. 1
பெண்கள் ரூ 0—8—0

Edited Printed & Published by C. N. Annadurai M A at DravidaNadu" Press
95, Tirukkachinambi Street Kancheepuram